**தலைப்பு – 117 – துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு – தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 17 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள், மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.2 கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாட்டுத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள், இதன் பந்தி (அ) இலிருந்து (இ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்

#### மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 133,280,026,262 தொகையானதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இதில் ரூபா 131,098,836,537 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 2,181,189,725 அதாவது 1.64 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 264,327,300 | 263,302,231 | 1,025,069 | 0.39 |
| மூலதனம் | 133,015,698,962 | 130,835,534,306 | 2,180,164,656 | 1.64 |
| **கூட்டுத்தொகை** | **133,280,026,262** | **131,098,836,537** | **2,181,189,725** | **1.64** |

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 346,000,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 11 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| விடய இலக்கம் | செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11701 | 8,000,000 | 7,665,597 | 3,900,000 | 5,512,563 | 34,000,000 | 26,714,582 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 11701 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் அறவீடுகள் நிலுவையாக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,565,173 ஆனதுடன், அந் நிலுவை மீதிகளில் ரூபா 1,084,190 தொகையை அறவிடும் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) அமைச்சிற்கு வெளியே மாற்றலாகிச் சென்றுள்ள 14 உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ரூபா 1,034,930 கூட்டுத்தொகையான கடன் மீதியில் உள்ள 12 உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ரூபா 745,099 தொகையான கடன் மீதி அறவிடப்பட முடியாதிருந்தது.

(iii) இறந்த அல்லது ஓய்வடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 215,633 தொகையான கடன் மீதியில் ரூபா 24,481 தொகையான கடன் மீதி அறவிடப்படாது காணப்பட்டது.

(iv) சேவையை விட்டு விலகிய உத்தியோகத்தருக்கு உரித்தாக 16 ஆண்டுகளாக நிலவிவரும் ரூபா 21,140 தொகையான கடன் மீதியும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தருக்கு உரித்தான 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலவிவரும் ரூபா 293,470 தொகையான கடன் மீதியும் அறவிடப்படாது காணப்பட்டது.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஏனைய நிறுவனங்களிடமுள்ள சொத்துக்களின் முறையற்ற பயன்பாடு**

-------------------------------------------------------------------------------------------------------------------

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான 09 வாகனங்கள் முறையான அங்கீகாரம் இன்றி அமைச்சால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 1.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| **அரச நிதிச் சுற்றறிக்கை** | |
| 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஈ/423 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | வீதிப் பராமரிப்புப் பொறுப்பு நிதியத்தின் எதிர்வரும் ஆண்டிற்கு (2013) குறித்த ஆண்டின் பாதீடு அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2012 செப்தெம்பர் 15 ஆம் திகதி அல்லது இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வீதிப் பராமரிப்புப் பொறுப்பு நிதியத்தால் 2013 ஆம் ஆண்டின் பாதீடு அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய பீஈ 402 மற்றும் 402(1) சுற்றறிக்கை | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சால் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2014 நவம்பர் 04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

**1.6 செயலாற்றல்**

---------------------

2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் திட்டத்தின் படி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**(அ) பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள்**

-----------------------------------------------------------------------------------------

அமைச்சு அதன் நோக்கத்திற்கு உரித்தான செயற்பாடுகளிற்கு மாறாகச் செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிப்பட்டதுடன் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

**(i) வீதி பராமரிப்பு பொறுப்பு நிதியம்**

-----------------------------------------------------------

மேல் மாகாணத்தின் ஏ மற்றும் பீ வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வீதிப் பராமரிப்பு பொறுப்பு நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 828,829,239 தொகையில் ரூபா 19,574,706 தொகை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தற்ற வீதிப் பராமரிப்பிற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

**(ii) முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - கட்டம் I**

---------------------------------------------------------------------------

இச் செயற்திட்டத்திற்குச் சேர்க்கப்படும் கணனி இயக்குனர் மற்றும் சாரதிக்காக 2013 ஆம் ஆண்டின் போது செயற்திட்ட நிதியத்தில் ரூபா 1,476,335 கூட்டுத்தொகையான சம்பளங்களும் படிகளுமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த அந்த பதவியணியினர் செயற்திட்டத்தின் பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாது அமைச்சின் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**(ஆ) போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத பிரதான செயற்பாடுகள்**

-----------------------------------------------------------------------------------------------------

அமைச்சால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராதமை அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

**(i) பேஸ்லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் II**

-----------------------------------------------------------------------------

ஹைலெவல் வீதியினை கிருளபனை முதல் கொழும்பு ஹொரண வீதி வரை நீடிக்கும் நடவடிக்கைகள் 2009 நவம்பர் 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இதற்கான காணிகள் கையேற்கப்படும் நடவடிக்கைகளில் 7 சதவீதம் மாத்திரமே பூர்த்தியடைந்திருந்தன.

**(ii) பதுளை – கண்டி மாற்று வழி (ரஜ மாவத்தை)**

---------------------------------------------------------------------------------

4.2 கி.மீ அளவான இவ் வீதியின் நிர்மாணம் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையில் முற்றாகப் பூர்த்தி செய்யப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் சுற்றாடல் கற்கை அறிக்கை (EIA) பெறப்படுவதில் தாமதம் ஏற்பட்டமையால் நிர்மாணப் பணிகளை பூர்த்திசெய்யப்படுவதற்கு முடியாதிருந்தது.

**(iii) வீதி பராமரிப்புப் பொறுப்பு நிதியம்**

-----------------------------------------------------------------

வீதித்துறை ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி பொறுப்பு நிதியச் செயலகத்திற்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 81,550,939 தொகை செலவில் ஆலோசனைச் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்த நிதிக் கொள்கைச் செயற்பாட்டு கைநூலில் குறிப்பிடப்பட்ட 22 RMTF கொள்கை இல. XIX, XX, மற்றும் XXI கொள்கைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2011 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய மற்றும் DMS/E3/5/108/2 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களக் கடிதத்தில் இந் நிதியத்திற்காக செயலாளர், பிரதான பொறியியலாளர், கணக்காளர், தொழிநுட்ப கணக்காய்வாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் போன்ற நிலையான பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அப் பதவிகளுக்காக நிரந்தர ஊழியர்கள் சேர்க்கப்படாது பதில் கடமை அடிப்படையில் அமைச்சினதும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினதும் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## (iv) முன்னுரிமை வீதி செயற்திட்டம் - கட்டம் II

---

* உஸ்வெட்டகெயியாவ – பமுணுகம வீதி அபிவிருத்தி செய்யப்படுகையில் எஞ்சிய ரூபா 240 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டு நீர்கொழும்பு – கிரிஉல்ல வீதி அபிவிருத்தி செய்வதற்கு செயற்திட்டம் தீர்மானித்திருந்தது.இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், நீர்கொழும்பு – கிரிஉல்ல வீதி அபிவிருத்தி செய்யப்படும் மூல மதிப்பீடு ரூபா 277.91 மில்லியன் தொகையான போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 391.91 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

* உஸ்வெட்டகெயியாவ – பமுணுகம வீதியினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் குறித்த தொழில்நுட்ப முறைகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் ரூபா 12,694,590 தொகை செலவிடப்பட்டு மண்ணூதையிடல் (sand blasting) மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர்களின் உத்தரவாதக் காலத்தில் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாததன் காரணத்தால் இச் செயற்பாடுகள் செயற்திட்ட நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தன.

## (v) ஹட்டன் - நுவரெலியா வீதி மேம்பாட்டுச் செயற்திட்டம்

---

இச் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஹட்டன் - நுவரெலியா வீதியின் கி.மீ 93+550, 89+840 இடது பக்கம் மற்றும் கி.மீ. 91+540 இடது பக்க வீதியிலிருந்து அகற்றப்பட்ட மண் முறையற்ற விதத்தில் வைக்கப்பட்டதன் காரணமாக இதற்கு அருகாமையில் உள்ள மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு மண் அரித்துச் செல்லப்பட்டிருந்தது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சுற்றாடல் பாதுகாப்புப் பரிந்துரைகள் குறித்து

ஒப்பந்தக்காரர்களின் கவனம் செலுத்தப்பட்டிராத காரணத்தால் இத்தகைய நிலை உருவாகியிருந்தது.

- ஹட்டன் - நுவடிரலியா வீதிக்காகத் தயாரிக்கப்பட்ட விபரமான பொறியியலாளர் திட்டம் முறைப்படி தயாரிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 3,140 மில்லியன் தொகையான மேலதிக வேலை அளவீட்டுப் பத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. இங்கு ஆரம்ப வேலை அளவீட்டுப் பத்திரம் தனியார் நிறுவகம் ஒன்றால் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் முறையான வகையில் அளவீட்டுப் பத்திரம் தயாரிக்கப்பட்டிராமை தொடர்பாக அவர்களுக்கு எதிராக எவ்வித நடைமுறையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திட்டமிடல்**

---------------------

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**(i) பெரும்பாக கொழும்பு பிரதேசத்தில் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம்**

---------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த கொள்ளுப்பிட்டி - ஸ்ரீ ஜயவர்தனபுர வீதியில் வெலிகடை சந்தி மற்றும் HSBC வங்கி உள்ள சந்தியை மேம்படுத்தி வீதி சமிக்ஞைகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளும் கொள்ளுப்பிட்டி - ஸ்ரீ ஜயவர்தனபுர வீதியில் வெலிகடை – கொஹிலவத்தை வீதியைத் தொடர்புபடுத்தும் சந்தி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் குறித்த தினத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ii) முன்னுரிமை வீதி மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு செயற்திட்டம் (PRP-I)**

-----------------------------------------------------------------------------

இச் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் வீதிகளில் பின்வரும் வீதிகளின் நடவடிக்கைககள் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்திசெய்யப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும்

அவ் இலக்கை எய்தியிருக்கவில்லை. அவ் வீதிகளின் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறாகும்.

- பெலவத்தை – கன்கொடியாவத்த – மொறவக்க வீதி – 78 சதவீதம்
- திருவானகெட்டிய – அகலவத்தை வீதி – 57 சதவீதம்

**(iii) முன்னுரிமை வீதி மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு செயற்திட்டம் (PRP-II)**

இச் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் வீதிகளில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட இலக்கு எய்தப்பட்டிராத வீதி தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| செயற்பாடு | இலக்கிடப்பட்ட முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| | சதவீதம் | சதவீதம் |
| கலகெதர - இரம்புக்கனை வீதி | 70 | 50 |
| தன்னே கும்புர – ரிகில்லகஸ்கட – ராகல வீதி | 65 | 48 |
| திருவான கட்டிய – அகலவத்தை வீதியின் பாலத்தை மீள நிர்மாணித்தல்/ விஸ்தரித்தல் | 100 | 64 |
| நாகொட – கலவெல்லாவ பல்லபிட்டிய வீதி | 100 | 58 |

**(iv) வடக்கு வீதி இணைப்பு செயற்திட்டம் - மேலதிகக் கடன்/ நிதிய வழங்கல்**

2013 ஆண்டின் இறுதி வரையில் மறுசீரமைப்பு/ மேம்படுத்தப்படுவதற்கு இலக்கிடப்பட்ட முன்னேற்றத்தைப் பார்க்கிலும் கையேற்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் குறைந்த நிலையில் காணப்பட்ட வீதிப் பகுதிகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| செயற்பாடு | இலக்கிடப்பட்ட முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| | சதவீதம் | சதவீதம் |
| • வவுனியா – ஹொரவபொத்தான வீதி (கி.மீ. 24+000 முதல் 34+950 வரை) | 45 | 11 |
| • மதவச்சி – கப்பித்திகொல்லாவை வீதி (கி.மீ. 0+000 முதல் 12+600 வரை) | 40 | 5 |
| • மதவச்சி – கப்பித்திகொல்லாவை வீதி (கி.மீ. 12+600 முதல் 25+400 வரை) | 40 | 3 |
| • கப்பித்திகொல்லாவை – பதவிய வீதி (கி.மீ. 10+000 முதல் 15+500 வரை) | 36 | 2 |
| • கப்பித்திகொல்லாவை – பதவிய வீதி (கி.மீ. 15+500 முதல் 31+345 வரை) | 37 | 3 |

**(v) 46 பாலங்களை மீள நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

பிரான்ஸ் அரசாங்கத்தின் உதவியுடன் செயற்படுத்தப்பட்ட இச் செயற்திட்டத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 40 சதவீத இலக்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அவ் இலக்குகளை எய்தியிராத பால நிர்மாணிப்புகள் தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறாகும்.

| செயற்பாடு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|
| | சதவீதம் |
| • ஹங்வல்லை – பூகொட – ஊராபொல வீதியின் இல. 11/2 (பீ 146) | 15 |
| • மாத்தளை - இலுக்கும்புர – பல்லேகம வீதியின் இல. 9//8 (பீ 274) | 08 |
| • மேற்படி 2/8 (பீ 274) | 05 |
| • பேராதனை – பதுளை – செங்கலடி வீதியின் இல. 182/6 (ஏ 005) | 29 |
| • கொழும்பு - இரத்தினபுரி – வெல்லவாய – மட்டக்களப்பு வீதியின் இல. 207/1 (ஏ 004) | 22 |
| • படல்கும்புர – புத்தல – செல்லக் கதிர்காமம் வீதியின் இல. 8/2 (பீ 035) | 08 |

**(vi) தேசிய வீதித் துறைச் செயற்திட்டம்**

----------------------------------------------------------------

இச் செயற்திட்டத்தின் கீழான வீதிப் பகுதிகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருந்தன. மேலும், இச் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெருந்தெருக்கள் பிரதம செயலகத்தின் நிர்மாணிப்புகள் 2010 ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 04 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் கைப்பற்றப்பட்ட மொத்த முன்னேற்றம் 75 சதவீதமாகக் காணப்பட்டது. 2014 திசெம்பர் 01 ஆம் திகதி வரையிலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**(vii) துறைமுகப் பிரிவு**

---------------------------------

துறைமுகப் பிரிவு தொடர்பாக செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

- **இலங்கை துறைமுக அதிகாரசபைக்காக திட்டமிடப்பட்ட தலைமை அலுவலகக் கட்டிடம்**

  ------------------------------------------------------------------------------------------------

  2013 சனவரி மாத நிர்மாணிப்பிற்காகத் திட்டமிடப்பட்ட இக் கட்டிட நடவடிக்கைகள் 30 மாத கால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அதன் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- **இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்**

  ------------------------------------------------------------

  இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களில் 04 கப்பல்களின் கொள்வனவு முதலாம் கட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**1.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

அமைச்சால் ஏற்படுத்தப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றதாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

**(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறையிலிருந்து விலகல்**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையில் 03 ஆவது வழிகாட்டலின் படி குறித்த பொருட்கள் (Specific goods) கொள்வனவு செய்யப்படுவதற்காக ஏற்ற கொள்வனவு நடைமுறையைப் பின்பற்ற வேண்டிய போதிலும் அவ் ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு ரூபா 822,700 பெறுமதியான கணனி, அச்சு இயந்திரம் மற்றும் UPS மற்றும் வாயு குளிரூட்டி, தொலைநகலின் மூலம் விலைக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ii. வாகனப் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக சேவை நிலையத்தைத் தேர்ந்தெடுக்கையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையில் 2.2 ஆவது வழிகாட்டலிற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(ஆ) அதிகாரப் பொறுப்பற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

---

2013 ஒக்டோபர் 30 ஆம் திகதிய MH/HWY/AC/16/02/05/SP ஆம் இலக்க அமைச்சின் தொழில்நுட்ப மாதிரிகளுக்கு முரணாக 05 ஆண்டுகளுக்கு உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் அனுபவம் அற்ற தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா 282,000 பெறுமதியான மடிக்கணனி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**1.8 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 46 | 29 | 17 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 638 | 412 | 226 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 70 | 47 | 23 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 04 | - | 04 |
| | **மொத்தம்** | **761** | **497** | **268** | **04** |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலவிய 268 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள்**

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான 61 உத்தியோகத்தர்கள் அமைச்சின் பல்வேறு பதவிகளில் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

.